# திருமலைத்தீபம்

THIRUMALAI THEEPAM

எழுந்து ஒளி வீசு

திருகோணமலை மறைமாவட்டத்தின் மாதாந்த பத்திரிகை

சுடர் 13
விலை 20/=

மாசி இதழ்~2015 ,ஆரம்பம் 15மாசி~2013. திருமறைக்கல்வி நடுநிலையம், இல: 297 டொக்கியாட்வீதி, திருகோணமலை. தீபம்~13

E-mail- catetcota@gmail.com

T.P- 026 2221022, 0263202532

**கடவுளோடு ஒப்புரவாகுங்கள், இதுவே தகுந்த காலம் (2கொரி.5:20)**



## மறைமாவட்ட ஆயர் தரும் செய்தி

புதிய ஆண்டின் இரண்டாம் மாதம் அனைவருக்கும் எனது நல்லாசீர்கள். கடந்து சென்ற மாதத்திலே திருத்தந்தையின் இலங்கை வருகையும் தூய யோசேப் வாஸ் அடிகளாரின் புனித பட்ட நிகழ்வும் சன சமுத்திரத்தின் மத்தியில் வெற்றிகரமாக நிகழ்ந்தேறியது. பெருமகிழ்வோடும் இன மத மொழி பேதங்களின்றி மக்கள் திரண்டிருந்தார்கள். திருத்தந்தையின் செய்தியிலும் பேதங்களற்ற வேறுபாடுகளற்ற உண்மையான உறவின் நிலைகளையே திருத் தந்தையும் வலியுறுத்தி இருந்தார். மேலும் கடந்த கால யுத்தமும் அதன் பாதிப்புகளும் இன்னும் விடு படமுடியாத நிலைகளையும் மாற்றி அந்த மக்கள் அமைதியாக வாழும் சூழலை உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்று புதிய அரசை வலியுறுத்துவதாகக் கூறியிருந்தார்.

மடு திருப்பதிக்கும் திருத்தந்தை சென்றிருந்தார். நிறைந்திருந்த மக்கள் பெருவெள்ளத்திலே மிகுந்த மகிழ்வோடு பேதங்களற்ற வேறுபாடுகளற்ற வாழ்வை அனைவரும் ஒன்றினைந்து வாழ வேண்டும் என்பதை தொனிப்பொருளாகக் கொடுத்திருக்கிறார். இறை வேண்டுதல் செய்து மக்களுக்கு ஆசீ வழங்கினார். மடுத்திருப்பதிக்கு விஜயம் செய்த முதலாவது திருத்தந்தையாகவும் விளங்குகின்றார் என்பது பெருமகிழ்வே.

மேலும் புதிய ஆட்சியானது கடந்த ஆட்சியில் மக்கள் கண்டஅவலங்களை போலன்றி மக்களால் உருவாக்கப்பட்ட மக்களாட்சியாக மலரும் போது உண்மையிலேயே நாட்டு மக்கள் அனைவரும் நிறைவான மகிழ்வைக் காண்பார்களென்பது முற்றிலும் உண்மையாகும் புதிய ஜனாதிபதியின் உரையிலும் அவரது செய்திகளிலும் இலங்கையில் புதியதொரு அரசியல் கலாச்சாரம் தோன்றுமென்பதும் எதிர்பார்ப்பாகவும் உறுதியாகவும் உள்ளது தெரிகின்றது.


இன்னும் இம் மாதம் 4ம் திகதி இலங்கை மாதாவின் நாளாகவும் இலங்கையின் சுதந்திர தினமுமாகும் உண்மையான சுதந்திரக் காற்றை அனைத்து மக்களும் சுவாசித்து வாழ மகிழ இலங்கை அன்னை துணைபுரிய வேண்டுமென்று அன்னையை வேண்டி நிற்போம். அதனையே புதிய ஆட்சியாளரும் தருவார்கள் என்னும் உறுதியுடன் செயற்படுவோம்.

மேலும் இம் மாதத்திலே இன்னு மொன்றை நாம் மறந்துவிட முடியாது. விபூதிப் புதன் தவக்கால ஆரம்ப நாளாகும் ஒறுத்தல், உபவாசம், செபதவம் என்று நமது வாழ்வின் திசைகளை மாற்றி புதிய வாழ்வினை வாழ்வதற்கு நமக்கு அழைப்பு விடுக்கப்படுகின்றது. இருளடைந்த நிலைகளைவிட்டு ஒளி படரும் புதுவாழ்விலே வாழவும் கறைபடிந்த மனங்களை மாற்றி நற்செய்திப்பணிகளிலே செயற்படவும் இத்தவக்காலம் நமக்கு அழைப்பு விடுக்கின்றது. மனம்மாறி நற்செய்தியை நம்ப அழைக்கும் தவக்காலத்திற்கு ஏற்ற விதமாக நம்மை தயார் படுத்துவோம். இறையாசீரை நிறைவாகப் பெற்றிடுவோம்.
அனைவரையும் இறைவன் நலன்களால் நிறைத்து நல்லாசீர் தருவாராக!

**அதி.வந். கலாநிதி**
**ஜோசப்கிங்ஸ்லி சுவாம்பிள்ளை**
**திருமலை மறைமாநில ஆயர்**

## திருத்தந்தையின் இலங்கை விஜயம்

### கொழும்பு



### மடுத் திருப்பதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களோடு பேசுகிறேன்..

அருட்பணி N.C அருள்வரதன்

புதிய வருடத்தில் இரண்டாவது மாதத்திலே மீண்டும் உங்களோடு பேசுவதற்கு ஒருவாய்ப்பு. மீண்டும் உங்களுக்கு வருடத்தின் வாழ்த்துக்களைக் கூறுகிறேன்.

முதலிலே திருத்தந்தையின் இலங்கைக்கான சிறப்பான வருகையும் தூய யோசேப்வாஸின் புனிதப்பட்ட நிகழ்வும் எதுவித குறைகளோ, தடைகளோ இன்றி வெற்றிகரமாக நிறைவேறியது மிகவும் மகிழ்ச்சிக்குரியதே.

அதேபோன்று திருத்தந்தை அவர்கள் மடு திருப்பதிக்கும் சென்றார். மடுத்திருப்பதிக்கச் சென்ற முதலாவது திருத்தந்தையாகவும் வரலாற்றிலே இடம் பெற்றுள்ளமை பெருமைப்பட வேண்டியதாகவும் திருத்தந்தை கால்பதித்த மடுத்திருப்பதி மண்ணையும் ஆசி பெற்றதாகக் கூறுகின்றோம். இவை அனைத்திற்காகவும் நமது மண்ணின் முதற் புனிதரான யோசேப்வாஸ் முனீந்திரருக்கும் நன்றி கூறித் தொடர்ந்தும் வேண்டுவோம்.

திருத்தந்தையின் வேண்டுதலிலே நாட்டிற்கும், நாட்டு மக்களுக்கும், நல்லாட்சி முறைக்குமாக மிக ஆழமான, தெளிவான கருத்துக்களை வேண்டுதலாக வேண்டி நின்றார்.

வழிபாட்டின்போது அனைத்து மக்களும் ஒருமித்து ஒன்றுகூடி வழிபாட்டிலே ஈடுபட்டிருந்தனர். திருத்தந்தையின் செய்திகளிலும் வேற்றுமைகளற்ற, பேதங்களற்ற, பிளவுகளற்ற ஒன்றிப்பினை வலியுறுத்தி இருந்தார்.

மேலும் திருத்தந்தையின் வேண்டுதலின் போது கடந்த கால யுத்தக்கொடுமைகளையும், அதனால் ஏற்பட்ட இழப்புக்களையும் இன்னும் விடுபட முடியாத துயர வடுக்களையும் எடுத்துக்கூறி அவர்கள் இழந்த அமைதியை மீண்டும் பெறுவதற்கு புதிய ஆட்சி முறை வழிசமைக்குமென தமது நம்பிக்கையைக் கூறினார்.

மேலும் இம் மாத நடுப் பகுதியிலே அதாவது இம் மாதம் 18ம் திகதி விபூதிப் புதனுடன் தவக்காலம் ஆரம்பமாகிறது. **"கடவுளோடு ஒப்புரவாகுங்கள்".** இதுவே தவக்காலம் எனக்கூறும் (2கொரி.5 : 20) கூற்றினை உணர்ந்து செயற்படுவோம். அத்தோடு மத்.6:4) கூறுவது போன்று **"மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தையும் உங்களுக்கு கைம்மாறு அளிப்பார்."** என்பதையும் நினைவிற் கொண்டு செயற்படுவோம்.

திருத்தந்தையின் வருகையும் அவர் தந்த செய்திகளும், புதிய அரசின் ஆட்சி முறையும், அவர்களின் எதிர்காலத் திட்டங்களும், மக்களும், மக்களின் எதிர்பார்ப்புகளும் வெற்றிகரமாக நிறைவேறி பலனளிக்க வேண்டுமென்றும் தூய யோசப்வாஸை வேண்டி நிற்போம்.

மேலும் மாசி 4 இலங்கை மாதாவின் நாளும், இலங்கையின் சுதந்திர தினமுமாகும். இன்று மக்கள் ஏங்கி நிற்பது சுதந்திரத்தையே. வெறுமனே வார்த்தைகளால் நினைவு கூரப்படுகின்ற தினமாக இல்லாமல் மக்கள் அனைவரும் ஒரு மனத்தோராய் சுதந்திரக் காற்றை சுவாசிக்கும் நாளாக அமைய வேண்டும். அதுவே உண்மையான சுதந்திரமாகும். சுதந்திரமாக அனைத்து மக்களும் வாழ, சுதந்திரமாக அனைத்து மக்களும் பேச சுதந்திரமாக அனைத்து மக்களும் செயற்பட சுதந்திரம் வழி செய்ய வேண்டுமென எதிர்பார்க்கிறோம்.

அத்தோடு **"மனிதனே நீ மண்ணாக இருக்கிறாய் நீ மண்ணுக்கே திரும்புவாய்"** என்று கூறப்பட்ட விபூதி நாளையும் நினைவிற் கொண்டு தவக்காலத்தை தவமுயற்சிகளிலும், அறநெறிகளிலும் செலவிட்டு இறையாசீரைப் பெறுவோம் எனக்கூறிக் கொண்டு மீண்டும் உங்களோடு பேசுவேன் எனக் கூறி நிற்கிறேன்.

# வத்திக்கான் செய்தி

## எஞ்சியுள்ள தாள்களை மட்டுமல்ல, மனிதர்களையும் தூக்கி எறிகிறோம்



இலங்கை மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளில் திருத்தூதுப் பயண நிகழ்வுகளில் தான் மக்களிடம் கண்ட சாட்சிய வாழ்வின் அடையாளங்களும், ஆசீர் பெறுவதற்காக, பாதுகாப்பு அமைப்புகளையும் மீறி, தந்தையர் தங்கள் குழந்தைகளைத் தூக்கிக் காட்டியது போன்ற செயல்களும் தனது கண்களில் கண்ணீரை வரவழைத்தன என்றும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

இத்திங்களன்று பிலிப்பைன்சிலிருந்து உரோமைக்குத் திரும்பிய ஏறக்குறைய 15மணி நேர விமானப் பயணத்தில், அவரோடு பயணம் செய்த பத்திரிகையாளர்களின் பல கேள்விகளுக்குப் பதிலளித்த போது இவ்வாறு கூறினார் திருத்தந்தை.

ஏறக்குறைய ஒருமணி நேரம் நடைபெற்ற இச் சந்திப்பில் குடும்பம், கருத்தியல் காலனி ஆதிக்கம் மனித வாழ்வின் மேன்மை, பெற்றோரின் பொறுப்பான வாழ்வு, ஊழல் இஸ்லாமியப் பயங்கரவாதம், மால் தூசியக் கோட்பாடு, சீனா, தலாய்லாமா போன்ற தலைப்புகளில் பேசினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

மணிலாவில் ஏறக்குறைய எழுபது இலட்சம் மக்கள் திருப்பலியில் கலந்து கொண்டது பற்றிக் குறிப்பிட்டதைவிட, தக்லோபான் பற்றி அதிகம் பேசிய திருத்தந்தை, இப்பகுதியில் இடம் பெற்ற கடுமையான இயற்கைப் பேரிடர் பாதிப்புக்குப் பின்னரும் மக்கள் தங்கள் பாவங்களை நினைத்துச் செபித்தது, காணிக்கைகளை வழங்கியது, இன்னும் மணிலாவில் முன்னாள் தெருச்சிறார் பகிர்ந்து கொண்டது போன்றவை என்னை பேச இயலா நிலைக்கு வைத்தன என்று கூறினார்.

இந்த இரு நாடுகளுக்கும் ஏழ்மை பற்றிய செய்தியைக் கொண்டு செல்ல விரும்பியதாகவும், இக்காலத்தில் எஞ்சியுள்ள தாள்களை மட்டுமல்ல, மனிதர்களையும் நாம் தூக்கி எறிகிறோம், மனிதர்களை தூக்கி எறிவது, பாகுபாடாகும் எனவும் கூறினார் திருத்தந்தை.

உரோமையில் தலாய் லாமா அவர்களை சந்திக்காதது, சீனாவுடன் உறவு பற்றிய கேள்விக்குப் பதிலளித்த திருத்தந்தை, உரோமையில் அனைத்துலக கூட்டங்களில் தலைவர்கள் பங்கேற்கும் போது. அத்தலைவர்களைச் சந்திப்பது திருப்பீட செயலகத்தின் நடைமுறையில் கிடையாது என்றும் கூறினார்.

சீன அரசு நாகரீகமாக நடந்து கொள்கிறது, நாங்களும் நாகரீகமாக நடந்து கொள்கிறோம், ஆயினும் நான் சீன அதிகாரிகளைச் சந்திப்பதற்கு விருப்பமாக உள்ளேன் என்பது அவர்களுக்குத் தெரியும் என்று கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

# தகுந்த காலம்

தவக்காலமே வருக - உன்னை  
வரவேற்கவே இறைமக்கள் நாமிங்கே  
இதுவே நம் வசந்த காலம்  
மனமாற்றத்திற்கு தகுந்த காலமே  
நாற்பது எண்ணென்று விவிலியத்தில் நற்படிகளே  
நாம் படிக்க பாக்கியம் என்னவோ  
திருநீற்றுப் புதனையும் தந்து  
மனிதனின் மரணத்தையும் சிந்திக்க  
அற்புதமான நேரங்களன்றோ  
நான் என்றல்லாது நாமென்பதை  
வாழ்வாக்க பாவியெம்மை கடவுளோடு  
உறவாடி உளமார வந்த காலமன்றோ  
உள்ளங்களில் உண்மைகளை உரைத்து  
கிறிஸ்துவுக்குள் வாழ்வை புதுப்பிக்கும் காலமன்றோ  
வரலாற்றின் சிற்பத்தை செதுக்கி  
தன்னுயிரை துச்சமென எண்ணிய - காலமும்  
உலகை மீட்ட பயணமும் இதுவன்றோ  
சிலுவை சவாலை புதிய சகாப்தத்தை  
எழுதிய சுமையான சுகமான  
பயணம் தான் இந்த தவக்காலமன்றோ.

K.சுபா

## 23வது உலக கத்தோலிக்க நோயாளர் தினத்திற்கான திருத்தந்தையின் செய்தி



பெப்ரவரி 11ம்தேதி கொண்டாடப்படும் 23வது உலக கத்தோலிக்க நோயாளர் தினத்திற்கென வெளியிட்டுள்ள செய்தியில் பார்வையற்றோருக்குக் "கண் ஆனேன்" கால் ஊனமுற்றோருக்குக் கால் ஆனேன் **(யோபு 29,15)** என்ற இவ்வுலக தினத்தை மையப் பொருளை பல கோணங்களில் விளக்கியுள்ளார் திருத்தந்தை. புனித திருத்தந்தை 2ம் ஜோன்பால் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட இத்தினம் நோயால் துன்புறும் இயேசுவின் உடலோடு பல்வேறு வழிகளில் ஒன்றித்துள்ள மக்களை நினைத்துப் பார்க்க வைக்கின்றது. என்று கூறியுள்ளார் திருத்தந்தை. அதாவது இதயத்தின் ஞானம் பற்றிய சிந்தனைகளை இச் செய்தியில் வழங்கவிரும்புவதாக குறிப்பிட்டுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இதயத்தின் ஞானம் பற்றிய ஐந்து கூறுகளை நமக்கு வழங்கியுள்ளார். **"சேப்பியன்ஷயாகார்டிஸ்"** அதாவது இதயத்தின் ஞானம் என்பது, நம் சகோதர சகோதரிகளுக்கு பணிவிடை செய்வதாகும் இதயத்தின் ஞானம் என்பது நம் சகோதர சகோதரிகளுடன் இருப்பதாகும், இதயத்தின் ஞானம் என்பது நம்மையே மறந்து நம் சகோதர சகோதரிகளுடன் நேரம் செலவழிப்பது ஆகும். இதயத்தின் ஞானம் என்பது நம் சகோதர சகோதரிகளை தீர்ப்பிடாமல் அவர்களுக்குத் தோழமையுணர்வைக் காட்டுவதாகும் என்று விளக்கியுள்ள திருத்தந்தை நோயாளிகளின் படுக்கை அருகில் நேரம் செலவழிப்பதில் சிறப்பு மதிப்பு உள்ளது என்பதை அவசரமான இந்த உலகம் அடிக்கடி மறந்து விடுகின்றது என்றும், கடும் நோயால் பாதிக்கப்பட்ட மக்கள் வாழத் தகுதியற்றவர்கள் என்று சொல்வது எவ்வளவு பெரிய பொய் என்றும் கூறினார் திருத்தந்தை. நோயாளிகளுடன் செலவழிக்கும் நேரம் புனித நேரம். பணிவிடை பெற அல்ல, பணி புரியவே வந்த தம் மகனின் சாயலில் தம்மை வெளிப்படுத்திய இறைவனைப் புகழுவதாக இது இருக்கின்றது. நோயாளிகளுடன் செலவழிக்கும் நேரத்தின் மதிப்பைப் போற்றுவதற்குத் தூய ஆவியாரிடம் வரம் கேட்போம் என்றும் தனது செய்தியில் கூறியுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேர்தல் வெற்றி

அருட்பணி N.C அருள்வரதன்

தேர்தல் தந்த பாடமென்ன
பெரும்பான்மை
இனத்தவரின்
பெரும்பலங்கள்
இருந்தாலும்
சிறுபான்மை மக்களே
வெற்றிக்கு
வழி செய்தார்கள்

வெற்றியாளரை
சரியாக தெரியாவிட்டாலும்
முற்றான
அரசியலின் மாற்றமே
முழுவதாய்
வேண்டுமென்றே
தெட்டத்தெளிவாக
திடமுடனே வாக்களித்து
வெற்றிக்களிப்படைய
வாக்களித்து விட்டார்கள்

பட்ட துயர்
கொஞ்சமல்ல
பரிதாப நிலைகள் பல
அடக்குமுறைகள்
அராஜக வழிமுறைகள்
குரோத நிலைகளுக்குள்
கொந்தளித்த
மக்களுக்குள்
சீர் நிறைந்த நிலைகள்
கொண்ட
சிறந்ததொரு ஆட்சி
முறை
பார் போற்றும் வழிகளிலே
பரிசெனவே
கிடைக்கும் போது
பேர் மகிழ்வே
காண்போமே

தாம் கண்ட துயரங்கள்
ஊர் கண்ட
துயரவடுக்கள்
உளங்கண்ட
வேதனைகள்
மாறி அவை மறைந்தகல
மன நிறைவு பெறுவதற்கு
மக்கள் தந்த வெற்றிக்காய் மகிழும்
மக்கள் அதைக் காணவேண்டும்
சிறுபான்மை மக்களுக்காய்
சிந்திக்க வேண்டுகின்றோம்.

## முத்திப்பேறுபெற்ற ஜோசேப்வாஸ் அடிகளாரின் சிறப்புப் போட்டி

சரியான விடை

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 வா | 2 ஸ் | | 3 கொ | 4 ங் | 5 க | 6 ணி |
| 7 கோ | | 8 மி | | | | |
| | 9 பீ | 10 ரா | 11 ம | 12 ண | 13 ர் | |
| 14 ம | | 15 ண் | | | | 16 ம் |
| 17 டு | | 18 டா | | 19 பே | 20 த் | 21 ரோ |

பங்குப்பற்றிய அனைவருக்கும் பாராட்டுக்களும் நன்றிகளும்

பங்குபற்றியவர்கள் : 15 பேர்
சரியான விடையளித்தோர் : 02 பேர்

**பரிசுக்குரியவர்கள்**

1ம் பரிசு : 500.00 ரூபா
செல்வி அ. கரோலின் கீர்த்திகா
இல: 57, தபால்நிலைய வீதி,
திருகோணமலை

2ம் பரிசு: 300.00 ரூபா
சு.சுபாஷினி
3ம் வட்டாரம், நிலாவெளி
திருகோணமலை

## தவக்கால சிந்தனை



- * அழிவைத் தருவது – ஆணவம்
- * ஆபத்தைத் தருவது – கோபம்
- * இருக்க வேண்டியது – பணிவு
- * இருக்கக் கூடாதது – பொறாமை
- * கண்கண்ட தெய்வம் – பெற்றோர்
- * செய்யவேண்டியது – உதவி
- * செய்யக் கூடாதது – துரோகம்
- * நம்பக் கூடாதது – வதந்தி
- * மறக்கக்கூடாதது – நன்றி,
- * நம்முடன் வருவது – புண்ணியம்.

**எதிர்மறை குணங்களைத் தவிர்த்து நற்குணங்களுடன் வாழத்தூண்டுவது தவக்காலம்**

## தவக்கால சிறப்புப் போட்டி

**இடம் மாறி இருக்கும் 12 கவிதை வரிகளையும், உரிய இடங்களில் சரியாக வடிவமையுங்கள்.**

**சரியாக வடிவமைக்கும் மூன்று அதிஷ்டசாலிகளுக்குப் பரிசு**



**1ம் பரிசு : 700/-**
**2ம் பரிசு : 500/-**
**3ம் பரிசு : 300/-**

### சிலுவையின் சுமைதான் என்ன?

Fr. N.C

கேடுகள் நிறைந்தே கூடியோரின்
சொல்லிட முடியாத் துயர்களினால்
பாடுகள் நிறைந்த பாதையிலே
பாரமாம் சிலுவையைத் தோள்மீது
பாடுகள் படுகின்ற கோலமது
சோகங்கள் பெருகிக் கொண்டவராய்
எல்லைகள் கடந்த துயரினிலே
ஏங்கியே செல்லும் இயேசுபிரான்
கெடுமதி நினைந்த முடிவுகளால்
பொங்கியே ஒன்றாக எழும்போதங்கு
பொல்லாத நிலைகள் ஒன்றாகியே
பாவமாய்ச் சுமந்தே செல்கின்றாரே.

**உங்கள் கவனத்திற்கு :**

- சரியாக வடிவமைக்கும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு பரிசுகள் வழங்கப்படும்.
- இப்போட்டியில் யாவரும் கலந்து கொள்ளலாம்.
- கையெழுத்திலோ. தட்டச்சு மூலமோ, கணணி மூலமோ கவிதையை அனுப்பலாம்.
- **முடிவுத் திகதி 28.02.2015 ஆகும். இத்திகதிக்குப் பின் வரும் கவிதைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டாது.**
- உங்களது பெயர், முகவரி, பங்கு என்பவற்றைத் தெளிவாக எழுதி அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:-
**"தவக்கால சிறப்புப் போட்டி"**
**திருமலைத்தீபம்**
**297 டொக்கியாட் வீதி,**
**திருகோணமலை.**

## திருவிவிலியத்தில் நாற்பது

திருவிவலியத்தில் நாற்பது என்னும் எண்ணைக் கடவுள் ஓர் ஆன்மீகப் பொருள் நிறைந்த காலமாகத் தந்துள்ளார். நாற்பது என்னும் எண் ஒரு முழுமையைக் குறிக்கிறது. என்பர் அறிஞர். நாற்பது ஆண்டுகள் என்பது ஒரு தலைமுறையைக் குறிக்கும் சொல்லாகும். எனவே தான் நீதித் தலைவர்கள், அரசர்கள் போன்றோர் நாற்பது ஆண்டுகள் ஆட்சி செலுத்தினர் என்று விவிலியம் குறிப்பிடுகிறது. (எ.கா நீதி 9:28 1அர 2:11 ; 11:42)

அவ்வாறே கடவுள் தமது நோக்கத்தின் படி எவரையாவது பயிற்றுவிக்க விரும்பினால் அதற்கும் நாற்பது நாட்களை எடுத்துக் கொண்டார் என்று விவிலியத்திலிருந்து பல எடுத்துக்காட்டுகளை கூறலாம்.

☆ நாற்பது நாள் பெய்த பெருமழையில் நோவாவின் வாழ்வு புதிதாய் மாறியது (தொ.நூ 8:6)

☆ சீனாய் மலையில் நாற்பது நாள்கள் மேற்கொண்ட தவத்தின் உச்சத்தில் மோசேயின் வாழ்வு அருள் பொழிவு நிறைந்ததாய் மாறியது (விப24:18)

☆ வாக்களிக்கப்பட்ட நாட்டில் நாற்பது நாட்கள் தங்கியதால் ஒற்றர்களின் (உளவாளிகள்) பார்வை மாறியது. (எண்13:25)

☆ கோலியாத்தின் நாற்பது நாட்கள் சவாலை எதிர் கொண்ட தாவீதின் வாழ்வு தலை கீழாய் மாறியது. (1சாமு 17:16)

☆ கடவுள் தந்த உணவை தொடர்ந்து நாற்பது நாட்கள் உட்கொண்டதால் எலியாவின் வாழ்வு வலிமை மிக்கதாய் ஆனது. (1அர 19:8)

☆ யோனாவின் இறைவாக்குப் பணியின் மூலமாக கடவுள் தந்த நாற்பது நாட்களில் நினிவே நகர் முழுவதும் மனமாற்றமும் உயிர் மீட்சியும் கண்டது. (யோனா 3:4)

☆ பாலை நிலத்தில் நாற்பது நாட்கள் நோன்பு இருந்ததால் இயேசு அலகையை வென்று வலிமை மிக்கவராய் வெளிப்பட்டார். (மத் 4:2)

☆ இயேசு உயிர்த்தெழுந்த பிறகு நாற்பது நாட்களாக சீடர்களுக்குத் தோன்றி இறையாட்சியைப் பற்றிக் கற்பித்ததால் அவர்கள் புது வாழ்வு கண்டார்கள் (திப1:3)

### அறிவித்தல்

உங்கள் அன்புக்குரியவர்களின் பிறந்தநாள், திருமணநாள், இறந்தநாள் ஆகியவற்றை பிரசுரிக்க வேண்டியவர்கள் எந்த மாதத்தில் பிரசுரிக்க வேண்டுமோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 10ம் திகதிக்கு முன்னர் அனைத்து விபரங்களையும் தெளிவாக எழுதி எம்மிடம் ஒப்படைக்க வேண்டும் என்பதை அன்போடு நினைவு படுத்துகின்றோம்

### கட்டணம்

| | | |
|---|---|---|
| கறுப்பு வெள்ளை | 1/4 பக்கம் | - 2500.00 |
| | 1/2 பக்கம் | - 5000.00 |
| கலர் | 1/4பக்கம் | - 3750.00 |
| | 1/2 பக்கம் | - 7500.00 |

### சிந்திக்க சில வரிகள்

- பிறருக்கு உன் மதிப்பு தெரியவில்லை என்றால் நீ மதிப்பு குறைந்தவன் என்று அர்த்தமில்லை.
- தவறு செய்வது மனித பெலவீனம் மன்னிப்பதோ இறைவனின் பெலம்.
- வெற்றி என்பது பெற்றுக் கொள்வது தோல்வி என்பது கற்றுக் கொள்வது.
- கடவுள் வாரந்தோறும் சம்பளம் கொடுப்பதில்லை வாழ்க்கையின் முடிவில் கொடுக்கின்றார்.
- ஒரு மனிதன் விழாமலே வாழ்ந்தான் என்பது பெருமையல்ல விழுந்த போதெல்லாம் எழுந்தான் என்பதே பெருமை.
- இலட்சியம் இல்லாத வாழ்க்கை துடுப்பு இல்லாத படகை போன்றது.
- சோம்பலும் சோர்வும்கொண்டு நூறு ஆண்டுகள் வாழ்வதை விட பேருழைப்போடு ஒருநாள் மேலானது.

**சகாயதாசன் மொறிஸ்றெலா**
**தி/விபுலானந்தாக் கல்லூரி, பாலையூற்று**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரும்பாகி மலரும் தவக்காலம் அருள்வாழ்வின் இளந்தளிர் காலம்



**தவக்காலம் ஓர் தயாரிப்புக் காலம்**

தவக்காலம் என்பது நம் ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழாவிற்குத் தயாரிப்பாக இறை வேண்டலிலும் தவத்திலும் தியாகத்திலும் நற்பணிகளிலும் சிறப்பாக நம்மைத் தயாரிக்கும் காலமாகும். திருச்சபையின் திருவழிபாடுகளில் நம்மைப் புதுப்பிக்கும் நோக்குடன் இரண்டாம் வத்திக்கான் சங்கத்தில் வெளியிடப்பட்ட திருவழிபாடு என்னும் ஏடு தவக்காலத்தின் தனிச் சிறப்பு மிக்க இரு பண்புகளைப்பற்றி பேசுகின்றது. அவையாவன :

1. திருமுழுக்கில் நாம் பெற்ற அருளை மீண்டும் புதுப்பிப்பது அல்லது திருமுழுக்கிற்கு நம்மை தயாரிப்பது.
2. பாவத்திற்கு பரிகாரமாக தவ முயற்சிகளை மேற்கொள்வது. எனவே தவக்கால திருவழிபாட்டுக் கொண்டாட்டங்களில் மேற் சொன்ன இரண்டு கருத்துகளும் அதிக அழுத்தம் பெறுகின்றன.

இப்பண்புகளை அடையவே இறைவார்த்தைக்கு செவிமடுத்து அதை வாசித்து, தியானித்து, இறை திருவுளத்தை கண்டுபிடித்து அதற்குக் கீழ்படிய இக்காலத்தில் அதிக வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. மேலும் இறை வேண்டலுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. அமைதியில் இறைவனோடு உறவாடவும் அதிகமான நேரத்தை செபத்திற்கு செலவிடவும் விசுவாசிகள் பழக்கப்படுத்தப்படுகின்றனர். இவ்வாறு நம் விசுவாச உண்மையாகிய இயேசுவின் உயிர்ப்பைக் கொண்டாட இக்காலத்தில் நாம் நன்கு தயாரிக்கப்படுகின்றோம்.

**தவக்காலம் ஓர் இளந்தளிர் காலம்**

தவக்காலம் என்று நாம் தமிழில் மொழி பெயர்த்துள்ள வார்த்தையானதுஆங்கிலத்தில் லெந்து **(Lent)** என்று அழைக்கப்படுகின்றது. அது ஆங்லோ-சாக்சன் வார்த்தையான லெங்தென் **(Lenten)** என்னும் வார்த்தையிலிருந்து வருகின்றது. இதன் சரியான பொருள் இளந்தளிர் அல்லது வசந்தம் என்பதாகும். இந்த வார்த்தையிலிருந்து தான் மார்ச் (March) என்னும் ஆங்கில வார்த்தையும் வருகின்றது. பெரும்பாலும் ஆங்கில மாதமாகிய மார்ச் மாதத்தில் தான் இந்தத் தவக்காலம் நிகழ்கின்றது. ஐரோப்பிய நாடுகளில் மார்ச் மாதம் என்பது இளந்தளிர் காலமாகும். அதாவது குளிர் காலம் முடிந்து ஆங்காங்கே புற்களும், பூக்களும் எங்கணும் தளிர்விடத் தொடங்கியுள்ள பசுமையான காலமாகும். பனியும் குளிரும் தந்த கொடுமை மறையத்தொடங்கும் காலமாகும். அதிகம் சுட்டரிக்காத இளஞ்சூரியன் பட்டொளி வீசுவதால் ஓர் இதமான குளுமை நிறைந்த சூழல் நிறைந்த காலத்தைத் தான் **"லெந்து"** என்று மேலை நாட்டினர் குறிப்பிட்டனர் இவ்வளவு வழமையானப் பொருளை தமிழில் தவக்காலம் என்பது தரவில்லை. தவம் என்னும் ஒரு பொருளை மட்டுமே தமிழில் விளக்குகின்றது. ஆனால் **"லெந்து"** இது அருள்வாழ்வுக்கு ஓர் இளந்தளிர் காலம் என்னும் ஆழமான பொருளில் புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

**தவக்காலம் உருவான வரலாறு**

திருச்சபையின் தொடக்க காலத்தில் நம் ஆண்டவர் இயேசுவின் பாடுகள், இறப்பு, உயிர்ப்பு ஆகிய மறைபொருளே அதிகம் நினைவு கூறப்பட்டன. இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழாதான் மிகப் பெரிய விழாவாக இருந்தது. இயேசுவின் பிறப்புப் பெருவிழா அப்பொழுது கொண்டாடப்படவில்லை . ஆகவே, உயிர்ப்புப் பெருவிழாவிற்குத் தயாரிப்பாக இந்தத் தவக்காலம் என்பது படிப்படியாக ஒரு வரலாறாக வளர்ந்து வந்துள்ளது. திருத்தந்தை முதலாம் விக்டர் அவர்களுக்கு புனித இரேனியுஸ் (கி.பி. 203) பின்வருமாறு எழுதுகிறார்."இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழா எப்பொழுது கொண்டாடப்பட வேண்டும் என்பது குறித்து மட்டுமல்ல அதற்குத் தயாரிப்பாக அமைந்துள்ள மிக முக்கியப் பண்பான நோன்பு குறித்தும் நாம் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. ஏனெனில் சிலர் ஒரு நாள் நோன்பு போதும் என்றும். வேறு சிலர் இரண்டு நாட்கள் அல்லது இன்னும் கொஞ்ச அதிக நாட்கள் போதும் என்றும் சொல்கின்றனர்.

ஆனால் இன்னும் சிலரோ நாற்பது மணி நேர நோன்பு முக்கியத்துவம் வாய்ந்தது என்கின்றனர். அதாவது உயிர்ப்புப் பெருவிழாவிற்குத் தயாரிப்பாக அதற்கு முன்னதாக நோன்பு இருக்கும் நல்ல பழக்கம் நம்முடைய நாடகளில் தோன்றியவை அல்ல. மாறாக அவை நம்முடைய முன்னோர்களின் மிகப் பழமையான மரபிலிருந்து பின்பற்றப்பட்டு வந்துள்ளவை ஆகும்". இதிலிருந்து அறியப்படுவது என்னவெனில் நாம் நோன்பு இருந்து நல்ல தயாரிப்புடன் உயிர்ப்புப் பெருவிழாவைக் கொண்டாட வேண்டும் என்பதாகும் மேலும் திருச்சபையின் வரலாற்றில் ரூபினுஸ் என்பவர் நாற்பது மணி நேரங்கள் என்னும் கிரேக்க வார்த்தையை நாற்பது நாட்கள் என்று இலத்தினில் மொழி பெயர்த்ததாகவும் ஒரு மரபு உள்ளது.

கி.பி 313-இல் கிறிஸ்தவம் அரச மதமாக உருமாற்றம் பெற்ற பிறகுதான் தவக்காலமும் ஒரு வரைமுறைக்குள் வந்தது. கி.பி 325-இல் நிசேயா சங்கம் திருச்சபை ஒழுங்குகளை வரையறுத்தது. அவற்றுள் ஒன்றில், நாற்பது நாட்களுக்குள் கொண்டாடப்படும் தவக்காலத்திற்கு முன்பாக ஒவ்வொரு மாநிலத்திலும் பேரவை கூட்டப்பட வேண்டும் என்கிறது. இதிலிருந்து ஓர் உண்மை புலனாகிறது. அதாவது நான்காம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தவக்காலம் என்பது நாற்பது நாட்கள் கொண்டாட்டம் என்கிற ஓர் ஒழுங்கிற்குள் வந்து விட்டது தெரிகிறது. புனித அத்தனாசியுசும் (கி.பி.373) புனித எருசலேம் நகரத்து சிரிலும் (கி.பி.386) தங்கள் கடிதங்களில் ஆண்டவரின் உயிர்ப்புக்கு முன்னதாக மிகவும் உக்கிரமாக கடைபிடிக்க வேண்டிய நாற்பது நாள் உண்ணா நோன்பு பற்றியும் அந்நாட்களில் திருமுழுக்கு பற்றிய போதனைக்குத் தரப்பட வேண்டிய முக்கியத்துவம் பற்றியும் வலியுறுத்திப் பேசுகின்றனர். கி.பி 444-ல் அலெக்சாந்திரியா நகர் புனித சிரிலும் நாற்பது நாள் தவக்காலத்தை வலியுறுத்தி எழுதியுள்ளார். நிறைவாக கி.பி461ல் திருத்தந்தை புனித லியோதான் நாற்பது நாள் தவக்காலத்தை நாம் அனைவரும் கண்டிப்பாக கொண்டாட வேண்டிய ஓர் அமைப்பாக அப்போஸ்தலிக்க நியமனமாக ஏற்படுத்தினார். சுருக்கக்கூறின் நான்காம் நூற்றாண்டு இறுதியில் தான் உயிர்ப்புப் பெருவிழாவிற்கு முன்னதாக தவத்துடனும் செபத்துடனும் கூடிய ஆன்மீகப் பயிற்சிகள் நிரம்பிய தவக்காலம் என்பது நாற்பது நாட்கள் கொண்டாடப்பட வேண்டிய ஓர் அமைப்பு என்பது முறைப்படுத்தப்பட்டது.

**தவக்காலத்தின் நாற்பது நாட்கள்**

வரலாற்றில் உருவான இந்த மரபிற்கு விவிலியமும் துணை நின்றது. ஏனெனில் நாற்பது என்னும் எண் விவிலியத்தில் ஆன்மீகப் பொருள் நிறைந்த முழுமையான ஓர் எண்ணாகும். மேலும் அது ஒரு தயாரிப்புக் காலத்தைச் சுட்டிக் காட்டும் ஒன்றாகும். சீனாய் மலையில் பத்துக் கட்டளைகளைப் பெறுவதற்கு முன்பாக மோசே நாற்பது பகலும் இரவும் உண்ணாமலும் குடிக்காமலும் ஆண்டவரோடு இருந்தார் **(விப34:28)** எலியா நாற்பது பகலும் இரவும் ஒரேபுமலையில் ஆண்டவரோடு நடந்தார்**(1அர19:8)** மிகமுக்கியமாக நம் ஆண்டவரும் மீட்பருமான இயேசு தமது பொது வாழ்க்கையை தொடங்குவதற்கு முன்பாக நாற்பது நாட்கள் பகலும் இரவும் பாலைவனத்தில் நோன்பிருந்து இறை வேண்டல் புரிந்தார் **(மத் 4:2)** இந்தப் பின்னணியிலும் நாற்பது நாட்கள் தவம் செய்தல் என்பது பொருளுள்ள ஒன்றாகப் புரிந்துகொள்ளப்பட்டது. எனவே, எத்தனை நாட்கள் நம் ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழாவிற்குத் தயாரிக்க வேண்டும் என்பதைக் குறித்து மாற்றுக்கருத்திற்கு இடமில்லாமல் நாற்பது நாட்கள் கொண்ட தவக்காலம் என்பது வரலாற்றாய் அமைந்தது.

இதைத் தொடர்ந்து வரலாற்றில் முக்கியத்துவம் பெற்ற இன்னொரு கருத்து நாம் எந்தெந்த நாட்கள் நோன்பிருக்க வேண்டும் என்பதாகும். எருசலேம் மரபின்படி திங்கள் முதல் வெள்ளி முடிய எட்டு வாரங்களுக்கு மக்கள் நோன்பிருந்தனர் என்று அறிகின்றோம். இவர்கள் சனி ஞாயிறு கிழமைகளை விட்டுவிடுவர். ஆனால் உரோமைக் கிறிஸ்தவர்களின் பழக்கமே பிற்காலத்தில் உலகமெங்கும் பிரபலமாயிற்று. திருநீற்றுப் புதன் தொடங்கி பெரியசனி முடிய உள்ள ஏழு வாரங்களில் ஞாயிற்றுக் கிழமைகளைத் தவிர்த்து கணக்கிட்டுப் பார்த்தால் மொத்தம் நாற்பது நாட்கள் நாம் நோன்பிருக்க வேண்டும் என்பது இங்கே தெளிவாகிறது.

**தவக்காலத்தின் நோன்பு ஒழுங்குகள்**

நோன்பிருக்கும் போது நாம் எதை உண்ணலாம் எதை உண்ணக் கூடாது என்பதைக் குறித்துப் படிப்படியாக வரலாற்றில் புரிதல்கள் வளர்ந்தன. திருச்சபையின் சில இடங்களில் எல்லா வகையான மிருகங்களின் இறைச்சிகளையும் மிருகங்களிடமிருந்து பெறப்படுபதையும் தவிர்க்க வேண்டும். எனும் கருத்து இருந்துள்ளது. ஆனால்அவர்கள் மீன் உணவை இறைச்சியாக கருதவில்லை. எடுத்துக்காட்டாக கி.பி 604 ல் திருத்தந்தை புனித கிரகோரி, கேந்தர்பரி புனித அகுஸ்தினாருக்கு பின்வருமாறு எழுதுகிறார். **"நாம் இந்தத் தவக்காலத்தில் எல்லா வகையான இறைச்சியினின்றும் மிருகங்களினின்றும் பெறப்படுபவையான பால், பாற்கட்டி, முட்டை போன்றவற்றினின்றும் விலகி நிற்க வேண்டும்"**. மேலும் நாள் ஒன்றுக்கு ஒருவேளை உணவு மட்டுமே உண்ண வேண்டும் என்றும் அதுவும் மாலை 3.00 மணிக்கு நம் ஆண்டவர் இயேசு சிலுவையில் உயிர் நீத்த நேரத்தை நினைவில் கொண்டு செபத்துடன் உண்ண வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு தவக்காலத்தில் எவ்வாறு நோன்பிருக்க வேண்டும் என்னும் ஒழுங்குகளும் படிப்படியாக உருவாகின. கடின உழைப்பு செய்பவர்களுக்கு உடலில் வலு தேவை என்பதால் அவர்கள் ஒருவேளை உணவை விட்டுவிடலாம் என்று பரிந்துரைக்கப்பட்டது. மீன் என்பது நம் ஆண்டவர் இயேசுவைக் குறிக்கும் அடையாளமாக இருப்பதால் அதை இறைச்சியோடு அவர்கள் இணைக்கவில்லை . ஆகவே மீன் உணவை உண்ணலாம் என்று பரிந்துரைக்கப்பட்டது. மேலும் முட்டைகளும் பாலும் தவிர்க்கப்பட்ட அந்த காலகட்டத்தில் தான் ஈஸ்டர் கேக் (easter cake) என்னும் உணவுப் பொருட்கள் உயிர்ப்புப் பெரு விழாவிற்குரிய சிறப்புப் பண்டமாக அறிமுகமாயின.

**தவக்காலம் நம்மை புதுப்பிக்கட்டும்**

இவ்வாறு ஒரு காலத்தில் மிகக் கடினமாக இருந்த தவக்கால நோன்பு ஒழுங்குகள் காலத்தின் ஓட்டத்தில் மாற்றங்கள் பெற்றன. இன்று அவை மிக எளிமையாக்கப் பட்டிருக்கின்றன. திருநீற்றுப் புதன் அன்று தவக்காலம் தொடங்குகின்றது. அன்றிலிருந்து ஞாயிற்றுக் கிழமைகளைத் தவிர்த்த நாற்பது நாட்களுக்கு மட்டுமே நாம் தவக்காலத்தைப் பின்பற்ற அழைக்கப்படுகின்றோம். இன்றைய காலத்திற்கு நோன்பிருத்தலும் இறைச்சியைத் தவிர்த்தலும் ஆகிய ஒழுங்குகள் மிக எளிமையாக்கப் பட்டிருக்கின்றன. அதாவது திருநீற்றுப் புதன் மற்றும் பெரிய வெள்ளிக் கிழமை மட்டுமே விசுவாசிகள் முழுமையான நோன்பை மற்றும் முழுமையான இறைச்சியைத் தவிர்க்கின்ற உணவை மேற்கொள்ளப் பணிக்கின்றனர். அதாவது இந்த இரண்டு நாட்களில் ஒருவேளை உணவு மட்டும் உட்கொள்ள வேண்டும். ஆனாலும் உடலுக்கு வலிமை வேண்டுவோர்முழுமையான உணவில்லாத சிற்றுண்டியையும் ஒன்றிரண்டு தடவைகள்உட்கொள்ளலாம். தவக்காலத்தில் வரும் அனைத்து வெள்ளிக் கிழமைகளிலும் இறைச்சியைத் தவிர்த்த எளிய உணவை விசுவாசிகள் உட்கொள்ள வேண்டும்.

☛ தொடரும்.....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை மறைமாநிலச் செய்திகள்

## 2014 ம் ஆண்டுக்கான தூய குவாடலூப்பே அன்னை ஆலய ஒளிவிழா நிகழ்வு

தூய குவாடலூப்பே அன்னை ஆலயத்தின் 2014ம் ஆண்டுக்கான ஒளிவிழா 28. 12. 2014 அன்று புனித பிரான்சிஸ் சவேரியார் மண்டபத்தில் மிகச் சிறப்பாக இடம் பெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக எமது திருகோணமலை மறைமாவட்ட ஆயர் அதி. வணக்கத்திற்குரிய கலாநிதி யோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்கள் தலைமையேற்ற நடாத்தி வைத்தார்.

## புதிய பங்குத் தந்தையின் வரவேற்பும் முன்னாள் பங்குத் தந்தையின் பிரியாவிடையும்

கடந்த 11.01.2015 அன்று தூய குவாடலூப்பே அன்னை ஆலயத்திற்கு புதிய பங்குத்தந்தையாக வருகை தந்த அருட்பணி செ.சுகுனேந்திரன் குரூஸ் அவர்களை பங்கு மக்கள் அனைவரும் அன்போடு வரவேற்றனர். அத்துடன் அன்றைய நாளில் பிரியாவிடை பெற்றுச் செல்லும் முன்னால் பங்குத்தந்தையர்கள் அருட்பணி S.S.ஜோன்பிள்ளை, அருட்பணி J.சுதர்ஷன் அவர்களை நன்றி கூறி வாழ்த்தி வழியனுப்பி வைத்தனர்.

## புதிய நிர்வாக சபைத் தெரிவு

திருகோணமலை மறைமாவட்ட தூய வின்சன் டீ பவுல் சபையானது 2014ம் ஆண்டிற்கான பொது அமர்வினை 02.08.2014 அன்று தூய குவாடலூப்பே திருத்தலத்தில் ஒன்று கூடியது. 2013ம் ஆண்டிற்கான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு தொடர்ந்து புதிய நிர்வாக சபை தெரிவு நடைபெற்றது.

| | |
|---|---|
| தலைவர் | : சகோ.G.B.B செபஸ்தியன் |
| செயலாளர் | : சகோ.J.B. லொறற்றா குரூஸ் |
| பொருளாளர் | : சகோ.A. அருள்தாஸ் |
| உப. தலைவர் 1 | :சகோ.S. ஜோர்ஜ் அமலதாஸ் |
| உப. தலைவர் 2 | :சகோ.G தர்சினி |
| உப. செயலாளர் | :சகோ.S.S. அந்தோனியா |

ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இப் பொது அமர்வில் T/DC.S.V.P ஆன்மீக இயக்குனர் அருட்பணி யூஜின் போல் ஜொனத்தன், தி/மறைக்கோட்ட முதல்வரும் தூய மரியாள் பேராலய ஆன்மீக இயக்குனருமாகிய அருட்பணி கிங்ஸ்லி றொபட் அடிகளாரும் பாடசாலை ஞான ஆலோசகர்களும் சகல ஆலோசனை சபை அங்கத்தவர்களும் கலந்து கொண்டனர். அன்றைய தினம் புனிதரின் சிலை வைப்பதற்கான கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டு வைபவமும் நடை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

செயலாளர் :
J.B. லொறற்றா குரூஸ்

## சிந்திப்போம் செயல்படுவோம்

- ☐ இயேசுவை அறிவோம், இயேசுவை அறிவிப்போம்.
- ☐ அருட்சாதனங்களைப் பெறுவோம், அருள் வாழ்வில் நிறைவு பெறுவோம்.
- ☐ குடும்பமாய்ச் செபிப்போம், கோடி நன்மை பெறுவோம்.
- ☐ மறைக்கல்வி கற்போம், மறைவாழ்வு பெறுவோம்.
- ☐ நம்பிக்கை உரையாடல்களால் உறவுப்பாலம் உருவாக்குவோம்.
- ☐ காலத்தின் அறிகுறிகளில், கடவுள் மொழி கேட்டிடுவோம்.
- ☐ இறைத்திருவுளம் நிறைவேற்ற இன்னல்களையும் எதிர்கொள்வோம்.
- ☐ நற்செய்திப்பணியை நாளும் செய்திடுவோம்.

## திருகோணமலை மறைமாவட்ட குருக்களின் இடமாற்றம்

01. அலஸ்தோட்டம் இறைஇரக்கத் திருத்தலம்
அருட்பணி ஆர். திருச்செல்வம் - சொறிக்கல்முனை
அருட்பணி பி. றொபின்சன் போல் 04 ஜனவரி 2015 பொறுபேற்றுள்ளார்.

02. குவாடலூப்பே பங்கு,
அருட்பணி சுகுனேந்திரன் குரூஸ் 06 ஜனவரி 2015 பொறுபேற்றுள்ளார்.
(பள்ளத்தோட்டமும் சேர்த்து)

03. செல்வநாயகபுரம் தூய வனத்து அந்தோனியார் ஆலயம்
அருட்பணி எஸ் எஸ் ஜேன்பிள்ளை 06. ஜனவரி 2015 பொறுபேற்றுள்ளார்.

04. தூய ஜோசேப்வாஸ் சிறிய குருமட அதிபர்
அருட்பணி எஸ் டக்ளஸ் ஜேம்ஸ் 10 ஜனவரி 2015 பொறுபேற்றுள்ளார்.

05. குழந்தை இயேசு ஆலயம்
அருட்பணி ஜே. சுதர்ஷன் : (தி/ தூய சூசையப்பர் கல்லூரி ஆசிரியர்)
(குழந்தை இயேசு ஆலயம்)

**உங்களது பணி சிறக்க வாழ்த்துக்களும் நன்றிகளும்**

**தகவல்: ஆயர்இல்லம்,
திருகோணமலை**

## பாலையூற்று திருத்தலத்தில் கிறிஸ்மஸ் Super star பாடல் போட்டி

பாலையூற்று திருத்தலத்தில் கடந்த 06.12.2014 அன்று Super star தெரிவு போட்டி நடைபெற்றது. இப்போட்டியானது முன்பள்ளி தொடக்கம் முதியோர் வரை 4 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு நடைபெற்றது இறுதி தேர்வானது மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி ரி.கிங்ஸ்லி றொபட் அவர்களின் தலைமையில் நிகழ்ந்தமை விசேட அம்சமாகும். பங்குபற்றிய அனைவரையும் வாழ்த்துகின்றோம்.

## பாலையூற்று திருத்தலத்தில் பரிசளிப்பு விழாவும் ஒளிவிழாவும்.

பாலையூற்று லூர்து அன்னை திருத்தலத்தில் கடந்த 07.12.2014 அன்று பரிசளிப்பு விழாவும், பைபிள் Grand Master நிகழ்வும் நடைபெற்றது. இந் நிகழ்வை சிறப்பிக்க திருகோணமலை மக்கள் வங்கி முகாமையாளர் விசேட அதிதியாக கலந்து கொண்டார்.

கடந்த 28.12.2014 அன்று நடைபெற்ற ஒளிவிழா நிகழ்வை அருட்பணி B. றொபின்சன் போல் அவர்கள் வருகை தந்து சிறப்பித்தார் அன்றைய நாளில் தேசிய மறைக்கல்வி வெற்றியாளர்களுக்கும், திருப்பாடல் போட்டி (ஆங்கிலம்) வெற்றியாளர்களுக்கும், கிறிஸ்மஸ் Super star வெற்றியாளர்களுக்கும் புலமைப்பரிசில் சித்தியடைந்த அனைவருக்கும் பரிசில்கள் வழங்கி பாராட்டப்பட்டார்கள்.

## தூய வின்சன் டீ பவுலின் திருச்சொருப திறப்பு விழா

கிழக்கு மாகாணத்தில் முதன் முறையாக திருகோணமலை மறைமாவட்டத்தில் தூய வின்சன் டீ பவுல் சபையினால் தூயகுவாடலூப்பே திருத்தலத்தில் கடந்த 20.09.2014 அன்று திருகோணமலை மறைமாவட்ட ஆயர் அதி. வந்தணைக்குரிய ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களால் திறந்து வைக்கப்பட்டமை சிறப்பம்சமாகும்.

இந் நிகழ்வில் தி/மறைமாவட்ட வின்சன் டீ பவுல் சபையின் ஆன்மீக இயக்குனர் அருட்பணி யூஜின் போல் ஜொனத்தன். சீனக்குடா தூய அந்தோனியார் ஆலய வின்சன் டீ பவுல் சபையின் ஆலோசகர் அருட்பணி ஜோர்ச் திசநாயக்க, குவாடலூப்பே திருத்தல உதவிப் பங்குத்தந்தை அருட்பணி சுதர்சன், தி/மறைமாவட்ட வின்சன்சியன் சகோதரர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தமை குறிப்படத்தக்கதாகும். தொடர்ந்து புனிதரின் கொடிதினமும் ஆயர் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

J.B.லொறற்றா குரூஸ்
செயலாளர்

## வெள்ள நிவாரண உதவி

கடந்த வருட இறுதியில் நாட்டில் ஏற்பட்ட இயற்கையின் அனர்த்தமாகிய தொடர் மழையினால் மக்கள் மிகவும் பாதிப்படைந்து தொழில் இழந்து வாழ்வாதாரம் இன்றி சிறுவர் முதல் பெரியவர்கள் வரை மிகவும் அல்லல் உற்ற நிலையில் எமது உவர்மலை பங்குத்தந்தை அருட்பணி யூட்சர்வானந்தன் அவர்களின் தலைமையிலும் வழிநடத்தல்களிலும் 28.12.2014 அன்று குழந்தை இயேசு ஆலயம் மற்றும் தூய யூதாததேயு ஆலய பங்கு மக்களின் பங்களிப்புடனும் குழந்தைஇயேசு ஆலய தூய வின்சன் டீ பவுல் சபை மற்றும் தூய யூதாததேயு ஆலய புனித யோசேப் வாஸ் மூப்பர் சபையின் உதவியுடனும் 400க்கும் அதிகமான மதிய உணவுப் பார்சல்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட நிலாவெளி, அடம்பொடை கிராம மக்களுக்கு உவர்மலை மறைபாடசாலை St.John Ambulance முதல் படைப்பிரிவின் மூலம் அக்கிராமத்தின் கிராம சேவர் அவர்களிடம் கையளிக்கப்பட்டது. இந்த இக்கட்டான இயற்கை அனர்த்த வேளையில்சாதி மத பேதமின்றி நாம் அனைவரும் இறைவனின் அதி உன்னத படைப்புக்கள் என்பதனை உணர்ந்து செயல்பட ஒவ்வொரு உள்ளங்களுக்கும் அதிகப்படியான மேலதிக உதவிகளை செய்த கண்ணாஸ் உரிமையாளர் மற்றும் பெயர் குறிப்பிடாத உபகாரிகளுக்கும் பங்குத்தந்தையின் நன்றிகள் உரித்தாகுக.

ப.போல்பிரகாஷ்
உபசெயலாளர்,பங்கு மேய்ப்புப் பணிசபை
குழந்தை இயேசு ஆலயம், உவர்மலை

## அருட்பணி J சுதர்சன் அவர்களின் ஓராண்டு குருத்துவ சிறப்பு

எமது குழந்தை இயேசு ஆலயத்திற்கு ஆசிரியர் படிப்பை மேற்கொள்ள வருகை தந்துள்ள அருட்பணி J. சுதர்சன் அவர்களின் ஓராண்டு குருத்துவ சிறப்பு நிகழ்வானது பங்குத்தந்தை அருட்பணி ஜூட் சர்வானந்தன் அவர்களின் தலைமையிலும் யோசப்வாஸ் சிறுவர் அமைப்பின் முன் ஆயத்தம் மற்றும் கலை நிகழ்வுகளுடனும் நடாத்தப்பட்டது. இந்நிகழ்வில் அப்போஸ்தலிக்க சபைகள் மற்றும் பங்கு மேய்ப்புப்பணி சபையாவரின் ஒத்துழைப்புடன் 19.01.2015 அன்று இனிதே கொண்டாடப்பட்டது. தந்தையின் ஆன்மீகக் குருத்துவப்பணியானது மேன்மேலும் சிறக்க இறையாசீர் கொண்டு வாழ்த்துகிறோம்.

யோசப்வாஸ் சிறுவர் அமைப்பு
குழந்தை இயேசு ஆலயம்
உவர்மலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் உலகை அலங்கரிக்கும் இயேசுவின் சிறு மலர்களாவோம்

அருட்பணி செ.சுகுனேந்திரன் குரூஸ்

இன்று என்றுமில்லா வகையில் சிறுவர்களின் உரிமையானது தேசிய மற்றும சர்வதேச அளவில் அங்கிகரிக்கப்பட்டுள்ளது, கடந்தகாலத்தில் சிறுவர்கள் சமுதாயத்தின் முக்கியமான உறுப்பினர்களாக மதிக்கப்படாமலும் அவர்களுடைய உரிமைகளுக்கும் முக்கியத்துவம் வழங்கப்படவில்லை.

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் மீது முழுமையான கட்டுப்பாட்டினைக் கொண்டிருந்தனர். இன்று சிறு பிள்ளைகள் தமக்குரித்தான எதிர்பார்ப்புக்கள் மற்றும் செயல் திறனுடனும் மனித பண்புடையவர்களாக அடையாளம் காணப் பட்டுள்ளார்கள். எதிர்காலத்தின் வளர்ந்தோர் என்ற கண்ணோட்டம் மாறி இன்று சிறுவர்கள் சிறுவர்களாக மதிக்கபபடுகின்றார்கள். சிறுவர் உரிமையானது உலகளாவிய மனித உரிமைப் பிரகடனத்தில் பதிக்கப்பட்டுள்ளது என்பதையும் இன்று நாம் கருத்திற் கொண்டிருக்க வேண்டும். ஏந்த ஒரு சமூகத்தினதும் எதிர்காலம் சிறுவர்கள் உடனே உள்ளது என்கிற அழியாத உண்மையானது இன்று உலகளாவிய ரீதியில் அடையாளம் காணப்பட்டுள்ளது. இன்றைய சிறுவர்கள் நாளைய சமுதாயத்தின் உறுப்பினர்களும் தலைவர்களுமாவர். சிறுவர்கள் நன்கு பராமரிக்கப்பட்டும் உரிய பயிற்சியும் கொடுக்கப்பட்டால் நாளைய சமூகம் நற்பிரஜைகள்கையில் சென்று சேரும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. சிறுவர்கள் முழுமையான உருவாக்குதலுக்கு உரித்துடையவர்கள். இவ் உருவாக்கலானது வெறும் உணவு, உடை, உறைவிடம் மற்றும் மருத்துவ தேவைகள் உள்ளடங்கியது மட்டுமன்றி அவர்களது அடிப்படையான உளவியல் மற்றும் ஏனைய தேவைகளை உள்ளடக்கியதாக அமைய வேண்டும். அன்பும் அரவணைப்பும் நிறைந்த சூழலில் வளர்வதற்கு அவர்கள் உரித்துடையவர்கள்.

பழைய ஏற்பாட்டில் பிள்ளைகள் இறைவன் அருளும் கொடையாகவும் ஆசீர்வாதமாகவும் கருதப்பட்டனர்.**(தொ.நூ1 : 28,4:1 திபா 127:3-5, 125:3-4)** பிள்ளைகள் இறைவன் அருளும் கொடையாக கருதப்பட்டாலும் சமுதாயத்தில் அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. **(வி.ப 12:37, லேவி 27: 1-7)** பிள்ளைகள் புரிந்து கொள்ளும் தன்மையற்றவர்கள் என்ற வகையில் அவர்களுடைய கருத்துக்கள் பெரிதும் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. சிறுவர்களுடன் பேசுவது நேரத்தை விரயம் செய்தலுக்கு சமமாக கருதப்பட்டது. இயேசு பிறந்து வளர்ந்த கலாச்சாரச் சூழலை நோக்குகையில் சிறுவர்கள் எதுவித உரிமையும் அற்றவர்களாகவும், சமுதாயத்தில் முக்கிய மற்றவர்கள் என்னும் கருத்தே காணப்பட்டது.

எனவே இயேசு சிறுவர்களுடன் ஏற்படுத்த விரும்பிய உறவும் அவர்கள் பணிவின் அடையாளமாகவும் உதாரணம் காட்டியது திருத்தூதர்கள் உள்ளத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது. சிறுவர்கள் அறிஞர்களோ அல்லது வேறுபட்ட அனுபவங்கள் கொண்டவர்களே அல்ல இதன் காரணமாக அவர்களது கருத்துகளும் விருப்பங்களும் பெரும்பாலும் புறக்கணிக்கப்பட்டன. ஆனால் இயேசு அப்பேற்பட்ட எண்ணத்தை சவாலுக்குட்படுத்தினார். சிறுவர்கள் பல நல்ல பாடங்களை பெரியவர்களுக்கு கற்றுத்தர கூடியவர்கள் எனும் கருத்தை ஆணித்தரமாக எடுத்துக் காட்டினார்.

**மத்தேயு 18:1-5** மற்றும் **19:13-15** சிறுவர்களை சமூகத்தில் மையப்படுத்தி பெரியவர்களுக்கும் தனது திருத்தூதருக்கும் சிறப்பான பாடங்களை கற்றுக் கொடுத்ததை அவதானிக்க முடிகிறது. இயேசுவின் சீடர்கள் விண்ணரசில் மிகப் பெரியவர் யார் என அறிய விரும்பினர். இயேசு அவர்களுக்கு நேரடியான பதில் கொடுக்காமல் சிறுபிள்ளை ஒன்றை அவர்கள் மத்தியில் நிறுத்தி "சிறு பிள்ளைகள் போல் நீங்கள் மாறாவிடில் விண்ணரசில் நுழையமாட்டீர்கள் இந்த சிறு பிள்ளையைப் போல தம்மை தாழ்த்திக் கொள்பவரே விண்ணரசில் மிகப் பெரியவர் (மத் 18/3-4) இயேசு சிறுவர்களை கிறிஸ்தவ வாழ்வின் மாதிரியாக எடுத்துக் காட்டுகிறார். வளர்ந்தோருக்கு இறைவனையும் அவரது அரசையும் சுட்டிக்காட்டும் அடையாளங்கள் சிறுவர்கள் என்ற உண்மையை இயேசு இந்த இடத்தில் தெரியப்படுத்தியுள்ளார். சிறுவர்கள் விண்ணரசிற்கு உரியவர்கள் என்பதையும் விண்ணரசு சிறுவர்களுக்குரியது என்பதையும் இயேசு உறுதியாக காட்டியுள்ளார்.
மாற் 9:33-37

இயேசு ஒரு தடவை தனது சீடர்களின் நடத்தையை கண்டு அதிருப்தி அடைந்த ார். "சிறுவர்களை என்னிடம் வரவிடுங்கள் தடுக்க வேண்டாம்..... (மாற்10:14 )இயேசு சிறுவர்கள் மடடில் தமது அளவுக்கதிகமாக அரவணைப்பை வெளிப்படுத்தினார். தம்மிடம் அவர்களை அழைத்து அவர்கள் மீது தம்கைகளை வைத்து ஆசீர்வதித்து சிறுவர்களுடைய சிறப்பினை நமக்கு நினைவு படுத்துகின்றன. இந்த சின்னஞ்சிறு உள்ளங்களை ஏற்றுக்கொள்பவர் இயேசுவையே ஏற்றுக்கொள்கின்றனர். (மத் 18:5)

இயேசுவின் பார்வையில் சிறுவர்கள் விண்ணரசை தங்குதடையின்றி ஏற்றுக்கொள்ளக் கூடியவர்கள் ஆவர் உள்ளத்தில் "தான்" எனும் எண்ணம் அற்றவர்கள் "அருள்" என்பது இறைவனின் கொடை இதனை எவருமே தனது திறமையினால் அடைய முடியாது.

சிறுவர்கள் எதனையும் தங்கள் திறமையி நிமித்தம் பெற்றுக்கொள்பவர் அல்ல மாறாக அது அவர்களுக்கு வழங்கப்படுகின்றது. அவர்கள் இயல்பாகவே பெற்றோரிலும் ஏனையவர்களிலும் நம்பிக்கை கொண்டு வாழ்பவர்கள். இவ்வாறாக இறைவன் மீது நம்பிக்கையும், எதிலும் அவரை சார்ந்திருக்கும் பண்பு தானே விண்ணரசுக்கு ஒருவரை கொண்டு செல்லும் இந்தப் பண்புகளை தன்னகத்தே கொண்டிருப்பவர் சிறுவர்கள். அவர்கள் தமது சிந்தனை, சொல், செயல் உரிமை அனைத்திலும் கபடற்றவர்கள் எனவேதான் விண்ணரசு அவர்களது உரிமை என இயேசு உறுதியாக எடுத்துரைத்தார். இச்சிறுமலர்கள் உலகை சிறந்த மலர்களாக உறுவாக்க வேண்டியது திருச்சபையின் பாரிய பணியாகும்.

## குட்டிக் கதை

Fr.NC



இரண்டு வண்டுகள், ஒன்று மலர் வண்டு மலர்களிலிருந்து தேனை சுவைத்து இனிமை காண்பது அதன் வழக்கம்.

மற்றது மலங்களிலும், அசுசிகளிலும் இருந்து சுவைத்து வாழ்வது அதன் வழக்கம். இந்த மலவண்டு மலர் வண்டைப் பார்த்துக் கேட்டது "பூக்களில் இருந்து என்னத்தைக் காண்கிறாய். ஏதாவது சுவை உண்டா"

அதற்கு மலர் வண்டு நான் சொல்ல மாட்டேன் நீயே போய் இருந்து சுவைத்துப் பார் உணர்வாய் என்று சொல்லிவிட்டுப் பறந்து விட்டது.

மலவண்டு நினைத்தது மலர் வண்டு என்ன சுவைக்கின்றது என்று பார்ப்போம் என நினைத்தபடி பூவுக்குப் பூ சென்று தண்டிலே இருந்து சுவைத்தது ஒன்றுமில்லை; இதழிலே இருந்து பார்த்தது அங்கும் ஒன்றுமில்லை இருக்க வேண்டிய இடத்தை விட்டு மற்ற எல்லா இடங்களிலும் இருந்து பார்த்துவிட்டது. எந்தச் சுவையும் தெரியவில்லை "சீச்சீ நேரத்தை வீணாக்கி விட்டேனே" என்று சொல்லிக் கொண்டு மலவண்டு மலத்தினை தேடிப் பறக்கின்றது தவையினை எவ்வோரும் சுவைக்க முடியாது என்பது உண்மைதானே.

## வெள்ளி விழாக் காணும் அருட்சகோதரர்.



புனித பிரான்சிஸ் அசிசீயாரின் மறைபரப்புச் சகோதரர்களின் துறவற சபையைச் சேர்ந்த அருட்சகோதரர் பென்ஜமின் எசக்கியேல் நியுட்டன் தமது துறவற வாழ்வின் 25 ஆண்டுகள் நிறைவை வெள்ளி விழாவாக மாத்தளையில் உள்ள புனித பிரான்சிஸ் அசிசியாரின் சிற்றாலயத்திலே கொண்டாடினார் இது அருட் சகோதரர்களினால் கொண்டாடப்பட்டது. இவ் வெள்ளிவிழா கொண்டாட்டமானது இவரின் ஊரில் உள்ள புனித அந்தோனியார் பங்கு ஆலயத்திலும், குருநாகல் மறைமாவட்ட ஆயரின் தலைமையிலும் இவர் கல்வி கற்பித்துக் குருக்களாக வந்த அருட்தந்தையர்களாலும் நன்றித் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளார்.

இவர் திரு. பஸ்ரியனுக்கும் திருமதி மனுவெல் அன்னம்மாளுக்கும் மகனாகப் பிறந்தார். 28ம் திகதி தைமாதம் 1965ம் ஆண்டே இம் மண்ணில் பிறந்தார் குருநாகல் மறைமாவட்டத்தில் உள்ள மகா கல்கமுவ என்னும் ஊரிலே பிறந்து 1986ம் ஆண்டு புனித பிரான்சிஸ் மறைபரப்புச் சகோதரர்களின் சபையிலே சேர்ந்து துறவற உருவாக்கம் பெற்று 1989ல் முதல் வார்த்தைப்பாட்டைக் கொடுத்த இவர் 1993ம் ஆண்டு தொழிநுட்பக் கல்வியைக் கற்று இந்தியாவில் உள்ள நாகர் கோவிலில் உள்ள கல்லூரியில் அதிபராக ஐந்து வருடங்களும் பெங்களூரில் உள்ள கல்லூரியிலும் உப அதிபராகவும் , இலங்கையில் உள்ள நாவலபிட்டியில் உள்ள கல்வி நிலையத்தின் பொறுப்பாளராகவும் , சிலாபத்தில் உள்ள துறவறமடத்தின் பரிபாலராகவும் இலங்கையில் உள்ள சகல மடங்களிலும் நற்பணிகள் ஆற்றியுள்ளார் புனித பிரான்சிஸ்குவின் மரைபரப்புச் சபையுடன் மரியாயின் பிரான்சிஸ்கன் சகோதரர்களின் சபை இணைந்து கொண்டபின் வந்த முதல் தேவ அழைப்புப் பெற்ற பெருமை இச்சகோதரரையே சேரும் மேலும் இவரின் பணி தொடர இறைவனை இறைஞ்சுகின்றோம்.

**அருட்சகோ.ஞா.மரியநாதன்**
**பு.பி.ம.ச**

**வாசகர்களே!**

உங்கள் ஆக்கங்கள், கவிதைகள், கட்டுரைகள், பங்கின் செய்திகளையும் ஒவ்வொரு மாதமும் 10ம் திகதிக்கு முன்பு எதிர்ப் பார்க்கின்றோம். அவற்றை **திருமலைத் தீபத்திற்கு** அனுப்பிவைக்கவும்.

**குறிப்பு:** பங்கு சார்ந்த செய்திகளை பங்குத்தந்தையின் அனுமதியுடன் அனுப்பி வையுங்கள்.

**அனுப்ப வேண்டிய முகவரி :-**
**ஆசிரியர்**
**திருமலைத் தீபம்**
**297, டொக்கியாட் வீதி,**
**திருகோணமலை.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மாசி மாதம் - 2015
## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி- 06
## தூய மத்தேயு நற்செய்தி 21 - 25

**அன்பார்ந்த வாசகர்களே**

"விடுபட்ட எழுத்துப்புதிர்" போட்டியானது விவிலியத்தில் குறிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி விடுபட்ட சொற்களை அல்லது வசனங்களை விவிலியத்தில் கண்டுபிடித்து கீழே தரப்பட்ட கட்டங்களுக்குள் முதல் எழுத்துக்கு அமைவாக கண்டுபிடிக்க முடியும். இப்படிவத்திலே விடைகளை எழுதி அனுப்பவும் குலுக்கல் முறையில் பரிசுகள் வழங்கப்படும். 1ம்பரிசு 500/=, 2ம்பரிசு 300/=, 3ம்பரிசு200/=, அனுப்ப வேண்டிய முகவரி :

**விடுபட்ட எழுத்து புதிர் போட்டி 05. திருமலைதீபம் 297 டொக்கியாட் வீதி, திருகோணமலை.**

**அனுப்ப வேண்டிய முடிவுத் திகதி 28. 02. 2015**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வி | ■ | பா | | | | | ■ | அ | |
| | | | | | | வா | ■ | | |
| | ■ | பெ | | | | | | | |
| | ■ | ■ | இ | | ■ | | | | |
| | | ப | | | நே | | கா | | |
| | | | | ம | | | ■ | நி | |
| | | | | | | | கோ | | |
| | | | | | | | | | |
| | | | | யோ | | | | | |
| ■ | நீ | ■ | | ■ | | தி | | | நி |

1. யோ........ன் நீதிநெ.......யைக் கா........ட
2. பா.....கரின் மழ...... 3. தி......மண வி......ந்........
4. ப.....சமும் நி......நடு....க......களும்
5. வி......ப்பாயி......ங்....ள் 6. நி......வா......வு பெ.....வும்
7. நே.....மை.......ளர் அ.......வரி....... இ......த்தப்ப.......
8. வா......வெளி.....ல் கோ......கள்

பெயர் ..........................................................................

முகவரி ......................................................................

பங்கு ..........................................................................

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி- 05
## தூய மத்தேயு நற்செய்தி 11 - 15
## விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பொ | ■ | உ | ன் | ■ | தா | வீ | தி | ன் | ■ |
| ய் | ம | ■ | ஐ | யா | ■ | வி | ■ | ல் | போ |
| ச் | க | சி | ■ | க | ள் | ட் | த | ■ | ■ |
| சா | னு | று | இ | ண | க | டு | ந் | ம் | னை |
| ன் | க் | பி | ர | வ | ர் | ■ | தை | ர | ட |
| று | கு | ள் | ங் | ன் | பா | ■ | யை | யி | ண் |
| ■ | ■ | ளை | கு | ■ | ப் | தா | ■ | தா | த |
| பெ | ரு | க | ம் | த | தி | ய் | எ | த் | ண |
| ய | து | ளை | ■ | ன் | வி | ■ | | ப | ர |
| ர் | பே | ப் | ■ | சொ | ல் | லா | தே | ■ | ம |

1. உன் பெயர் பேதுரு 2. ஐயா என் மகனுக்கு இரங்கும் 3. சிறுபிள்ளைகளைப் போல்
4. பத்தாயிரம் தாலந்து 5. கணவன் தன் தாய் தந்தையை (விட்டு) 6. பொய்ச் சான்று சொல்லாதே 7. மரணதண்டனை விதிப்பார்கள்.

**பங்குபற்றிய அனைவருக்கும் வாழ்த்துக்களும்,நன்றிகளும்.**

விடைகள் அனுப்பியோர் - 42

சரியானவிடை எழுதியவர்கள்-27

**பரிசுக்குரியவர்கள் :**

**1ம் பரிசு 500/=**
செல்வி. ஜெரோமினா தேவன்
இல. 25, பேராலய வீதி
திருகோணமலை

**2ம் பரிசு 300/=**
செல்வி.J.D. யூட்ஸ் பிறைனி
இல. 49, இலிங்கநகர்
திருகோணமலை

**3ம் பரிசு 150/=**
செல்வன். யோ. தேவேஷ்
3ம்வட்டாரம், நிலாவெளி

**பாராட்டுக்குரியவர்கள்:**

1. செல்வன். தே.சமில்டன் ~ நிலாவெளி
2. திருமதி வி. டொறத்தி ~ திருமலை
3. செல்வன் கு. கிஷோன் ~ பாலையூற்று
4. செல்வி. ஆன்வஜிரா ~ பேராலயம்
5. செல்வன் ஆர்.தினேஷ்ராஜ் ~ செல்வநாயகபுரம்
6. செல்வி. ஜெர்மினாவெல்ட் ~ செல்வநாயகபுரம்
7. செல்வன் ரி. மேஷாக் ~ பாலையூற்று
8. செல்வன் ச.கி. சேன் செவோன் ~ பாலையூற்று
9. செல்வி. டெ. இவான்ஜலின் ~ உவர்மலை
10. செல்வி. மா. பிறமின் குருஸ் ~ பள்ளத்தோட்டம்
11. செல்வி. ஆர். கேஷ்மியா ~ நிலாவெளி
12. செல்வி. நே.கெஷ்மியா ~ கும்புறுபிட்டி
13. செல்வி. கு.ஆன் பிறிசில்டா ~ இலிங்கநகர்
14. செல்வி. ம. தர்ஷிகா ~ பேராலயம்
15. செல்வி. சு. பிரசானி ~ அன்புவழிபுரம்
16. செல்வன் ஆர். டிலுக்ராஜ் ~ செல்வநாயகபுரம்
17. செல்வன் எஸ். செல்டன் ~ இலிங்கநகர்
18. செல்வி. எஸ். நிலானி அனிற்றா ~ சாம்பல்தீவு
19. செல்வி. ஆர்.எவ். பியூலா டானியலா ~ பேராலயம்
20. செல்வி. ஜே. புளோரிடா ~ பேராலயம்
21. செல்வன் டெ. சனோச் அன்ரனி ~ உவர்மலை
22. செல்வன் அ. அருள்ராஜ் ~ நிலாவெளி
23. செல்வி. டி. டி. சியாழினி ~பேராலயம்
24. செல்வன் சு. பகீதரன் ~ அன்புவழிபுரம்

## ஹாய் குட்டிஸ்
## திருவிவிலிய புதிர் போட்டி எண் ~ 13
## எண்ணிக்கை நூல் 13~24 வரை அதிகாரங்கள்

01. யோசுவா என்பதன் பொருள் என்ன?

**விடை**.......................................................

02. கொள்ளைநோயால் இறந்தோர் எண்ணிக்கை எத்தனை? (இலக்கத்தில் எழுதுக)

**விடை**.......................................................

03. ஆரோனின் பெயர் எந்தக் கோலின் மேல் எழுதப்பட்டது?

**விடை**.......................................................

04. எரிக்கப்பட்டவர்களின் தூய கலசத்தை எடுத்த குரு யார்?

**விடை**.......................................................

05. வாக்களிக்கப்பட்ட நாட்டிற்குச் செல்வர் எனக் கடவுள் கூறிய இருவர் யார்?

**விடை**.......................................................

06. எலயாசர் தன் விரலினால் எந்த இரத்தத்தை எடுத்து சந்திப்புக் கூடாரத்திற்கு முன்புறம் எத்தனை முறை தெளிப்பான்?

**விடை**.......................................................

07. நெருப்புத்தழல் எங்கிருந்து சென்றது?

**விடை**.......................................................

08. மோவாபு மூப்பரும், மியான் மூப்பரும் யார் அனுப்பிய செய்தியை பிலயாமிடம் வந்து சொன்னார்கள்?

**விடை**.......................................................

09. "உன் வாழ்விடம் உறுதியானது, உன் கூடு பாறையில் அமைந்துள்ளது" யார் யாரைப் பார்த்துக் கூறியது?

**விடை**.......................................................

10. பிலயாமின் தந்தை யார்?

**விடை**.......................................................

**பெயர்** ..............................................................

**முகவரி** ..........................................................

**பங்கு** ..............................................................

## ஹாய் குட்டிஸ்
## திருவிவிலிய புதிர்போட்டி எண்~10
## தூய மத்தேயு, தூய லூக்கா 14 ~ 27
## விடைகள்

01. ஆண்டவரின் தூதர் (மத்.2:13)
02. குரேனியு (லூக். 2:2)
03. ஆரோனின் வழிவந்தவர்கள் (லூக். 1:5)
04. கபிரியேல் வானதூதரால் மரியாளுக்கு (லூக். 1:30)
05. விடியல் (லூக். 1:79)
06. ஞானிகள் (மத்.2:2)
07. வானதூதருக்கு (லூக். 1:30)
08. திருக்கோவிலுக்குள் (லூக். 1:08)
09. இயேசுவின் தாய் மரியாள் (லூக். 1:46)
10. திருமுழுக்கு யோவான் (மத்.3:4)

**பங்குபற்றிய அனைவருக்கும் வாழ்த்துக்களும், நன்றிகளும். பங்குபற்றியவர்கள் - 38 பேர் சரியான விடையளித்தோர் ஒருவரும் இல்லை**

**குறிப்பு: இரண்டு போட்டிக்குரிய பரிசுக்குரியவர்களின் பரிசுத் தொகையை அவர்களது பங்குத் தந்தையிடம் பெற்றுக் கொள்ளலாம்.**


**அனுப்ப வேண்டிய முடிவுத் திகதி 28. 02. 2015**

## மறைக்கல்வி கற்போம் ~ 05

01. திருத்தந்தை முதலாம் பிரான்சிஸ் இலங்கைக்கு எப்போது வருகை தந்தார்?
    **2015.01.13**
02. திருத்தந்தை இலங்கை வந்து யாரை புனித நிலைக்கு உயர்த்தினார்?
    **அருளாளர் யோசப்வாஸ் அடிகளாரை**
03. தூய வனத்து அந்தோனியார் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?
    **எகிப்து**
04. தூய செபஸ்தியார் எத்தனையாம் ஆண்டு வேத சாட்சியாக மரித்தார்?
    **கி.பி 288ம் ஆண்டு**
05. தூய செபஸ்தியார் மரிப்பதற்கு காரணமான மன்னன் யார்?
    **தியோகிளோசியன் (Diocletian)**
06. இலங்கை மாதாவின் பெருவிழா எப்போது?
    **மாசி 04ம் திகதி**
07. ஆண்டவரை காணிக்கையாக ஒப்புக் கொடுத்த நாள் எப்போது?
    **மாசி 02ம் திகதி**
08. மாசி 11ம் திகதி யார் யாருக்கு காட்சி கொடுத்தது?
    **அன்னை மரியாள் பெர்ணடேற்றுக்கு**
09. திருநீற்றுப்புதன் அன்று நெற்றியில் **பூசப்படும் சாம்பல் எதை உணர்த்துகிறது?**
    **நாம் பாவத்தில் வீழ்ந்தோம் என்றால் வீழ்ச்சியும், சாவும் உறுதி என்பதை**
10. தவக்காலம் என்றால் என்ன?
    **நாம் இறைவனுடன் உறவைப்பலப்படுத்திக் கொள்ளவும் நம்மைத் திடப்படுத்தி நம்மையே உருமாற்றிக்கொள்ள கிறிஸ்துவின் துன்பங்கள் பாடுகள் மரணம் ஆகியவற்றைத் தியானித்து பாவத்திலிருந்து வெளியேறி தூய்மையடைய அன்னையாம் திருச்சபை தருகின்ற காலம் தான்.**
11. திருநீற்றுச் சாம்பல் எப்படித் தயாரிக்கப்படுகிறது?
    **வெற்றியின் ஓலையாக கடந்த ஆண்டு பயன்படுத்தப்பட்ட குருத்தோலை எரிக்கப்பட்டு சாம்பலாக்கி கறிஸ்மா தைலம் சேர்க்கப்பட்டு தயாரிக்கப்படுகிறது.**
12. சாம்பல் எதன் அடையாளமாக கத்தோலிக்கருக்கு காட்டப்படுகின்றது?
    **மனமாற்றத்தின் அடையாளமாக**
13. திருச்சபையில் நோயாளர் தினம் எப்போது அனுசரிக்கப்படுகிறது?
    **மாசி 11ம் திகதி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருட்பணி J. சுதர்சன் அவர்களின் ஓராண்டு குருத்துவ சிறப்பு





## 2014ம் ஆண்டுக்கான தூய குவாடலூப்பே அன்னை ஆலய ஒளிவிழா நிகழ்வு









## தூய வின்சன் டீ பவுலின் திருச்சொருப திறப்பு விழா



## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

"ஏனெனில் நான் வாழ்ந்தால் அது
கிறிஸ்துவுக்காகவே நான் இறந்தால் அது
எனக்கு ஆதாயமே" (பிலிப்பியர் 1:21)

மலர்வு
1984
11
16



உதிர்வு
2014
01
15

### Dr. ஜெ.றொபின்சன்

### செபம்

பிதாவே உம்மை ஆராதிக்கின்றோம்
இயேசுவே உம்மைப் போற்றுகின்றோம்
தூய ஆவியானவரே
உம்மைத் துதிக்கின்றோம்
ஜெயரெட்ணம் றொபின்சனின் ஆன்மா நிறைவான
நித்திய இளைப்பாறுதலை அடையட்டும் ஐயா
இவர் இவ்வுலகில் வாழ்ந்த போது செய்த
அனைத்துப் பாவங்களையும் கல்வாரி
இரத்தத்தால் சுத்திகரித்து ஆன்மாவைப்
பரிசுத்தப்படுத்தி நிறைவான நித்திய நிலை வாழ்வைக்
கொடுத்து இவரும்
உம் புனிதர்களின் கூட்டத்தில் உம்மைப்
புகழ்ந்து மகிழ்ச்சி கொள்ள வேண்டுமென்று
இயேசுவின் இனிய நாமத்தில் ஜெபிக்கின்றோம்
எங்கள் நல்ல பிதாவே
ஆமென்

தகவல்: தாயார்
உவர்மலை
திருகோணமலை

## புதிய நிர்வாக சபை தெரிவு



## வெள்ள நிவாரண உதவி





## புதிய பங்குத்தந்தையின் வரவேற்பும் முன்னாள் பங்குத்தந்தையின் பிரியாவிடையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org